# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல் மாவட்டம்,

முன்னிலை:–**திருமதி ஆ.முத்துசாரதா, பி.எல்., பி.ஜி.டி.பி.எம்.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, திண்டுக்கல்**

2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ம் நாள் புதன்கிழமை

**சிறப்பு திருமணஅசல் மனு எண்.94/2025**
(TNDG01–004174–2025)

ஆரோக்கிய டெய்சி

... மனுதாரர்

/ எதிர் /

செல்லத்துரை ..... எதிர்மனுதாரர்

இந்த சிறப்பு திருமண அசல்மனு இந்நீதிமன்றத்தின் முன்னால் 16.4.2024 ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்ததில், மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. P.சண்முகம், P. சடையாண்டி மற்றும் R. முத்துரத்தினம் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜரின்றி தோன்றாத் தரப்பினராக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்படும், ஆவணங்களைப் பரிசீலித்தும், இன்றுவரை இந்த நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உ த் த ர வு**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கொடைக்கானல் வட்டம், பண்ணைக்காடு கிராமம், காந்திஜிபுரத்தில் கடந்த 3.7.2011 ம் தேதி நடைபெற்ற

திருமணத்தை ரத்து செய்து, எதிர்மனுதாரரிடமிருந்து மனுதாரருக்கு விவாகரத்து வழங்க வேண்டுமென்று கேட்டு சிறப்பு திருமண சட்டம் பிரிவு 27(1)(d) ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு.

2) **<u>மனுச்சங்கதிகளின் சுருக்கம்;</u>**

மனுதாரரும் எதிர்மனுதாரரும் ஒருவரையொருவர் மனம் விரும்பி இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவு செய்து அவரவர் பெற்றோர்களிடம் தெரிவித்துள்ளார்கள். உபய மனுதார்களும் வெவ்வேறு சமூகத்தை சார்ந்தவர்கள் என்பதால், மனுதாரின் பெற்றோர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில் மனுதாரின் பெற்றோர்களுக்கு தகவல் தெரிவிக்காமல் மனுதாரரும், எதிர்மனுதாரரும் வீட்டை விட்டு சென்று கடந்த 2009–ம் வருடம் நவம்பர் மாதம் முதல் இருவரும் ஒன்றாக பண்ணைக்காட்டில் உள்ள எதிர்மனுதார் வீட்டில் வசித்து வந்தனர். இந்நிலையில் மனுதார்க்கு கடந்த 06.07.2010–ம் தேதி சுகேஸ் துரை என்ற ஆண்குழந்தை பிறந்தார்.

அதன்பின்னர் எதிர்மனுதாரரும், எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் முறைப்படியாக திருமண வரவேற்பு நிகழ்வு செய்ய வேண்டுமென்று கூறியதால் மனுதாரரும் சம்மதித்து கொடைக்கானல் வட்டம், பண்ணைக்காடு கிராமம், காந்திஜிபுரத்தில், 5–வது வார்டு கவுன்சிலர் M. மருதவீரன் அவர்களின் முன்னிலையில் கடந்த 03.07.2011–ம் தேதியில் எதிர்மனுதாரின் பெற்றோர்கள், உறவினர்கள், பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டார்கள். உபய மனுதார்கள் வெவ்வேறு சமூகத்தை

சேர்ந்தவர்கள் என்பதால் எதிர்மனுதார் திருமண உதவித்தொகை பெறும் நோக்கத்துடன் எதிர்மனுதார் கேட்டுக் கொண்டதற்கிணங்க மனுதாரரும் சம்மதித்து தமிழ்நாடு திருமண பதிவு சட்டத்தின் படி வத்தலக்குண்டு சார்பதிவக அலுவலகத்தில் கடந்த 07.10.2017–ம் தேதி, திருமணச் சான்று எண்: 67/2011–ஆக பதிவு செய்து கொண்டார்கள். அதன்பின்னர் மோனேஸ் துரை என்ற ஆண்குழந்தை கடந்த 27.07.2017–ம் தேதி பிறந்து வளர்ந்து வருகிறார். இந்நிலையில் சுகேஸ்துரை கடந்த 26.07.2025–ம் சாலை விபத்தில் இறந்துவிட்டார். தற்போது மைனர் மோனேஸ் துரை எதிர்மனுதாரின் பராமரிப்பில் இருந்து வருகிறார். இந்நிலையில் மனுதாருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு சண்டை சச்சரவுகளும், பிரச்சனைகளும், பெரிய அளவில் ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டு மனக்கசப்புடன் வாழ்ந்து வந்துள்ளார்கள். இந்நிலையில் எதிர்மனுதார் தவறான நபர்களுடன் சேர்ந்து மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்து, மனுதாரரை அடித்து, கொடுமைப்படுத்தி சித்ரவதை செய்வதும், மேலும் எதிர்மனுதார் தவறான முறையில் பல பெண்களுடன் கள்ள தொடர்பு வைத்து வாழ்ந்து வருகிறார். மேற்படி விபரம் மனுதார்க்கு தெரிந்த பின், எதிர்மனுதாரரை கண்டிக்கவே எதிர்மனுதார், "நான் அப்படி தான் செய்வேன். நீயும் யாருடன் வேண்டுமானாலும் செல்" என்று தரக்குறைவாக பேசியுள்ளார். இருந்த போதிலும் எதிர்மனுதார் செய்த கொடுமைகளையெல்லாம் பொறுத்து குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி மனுதார் சேர்ந்து வாழ்ந்து வந்துள்ளார். எதிர்மனுதார், மனுதாரிடம்,

மனுதாரின் பெற்றோர் வீட்டில் ரூ.1,00,000/யும் வரதட்சனையாக 10 பவுன் நகை வாங்கி வரும்படி கொடுமைப்படுத்தி வந்துள்ளார். மனுதார், தான் பெற்றோர் விருப்பத்திற்கு எதிராக திருமணம் செய்து கொண்டதால், மனுதார் எந்த தொகையும் வாங்கி வர முடியாது என்று மறுத்துள்ளார். எனவே கோபங்கொண்ட எதிர்மனுதார் மனுதாரரை சொல்ல முடியாத சித்ரவரை செய்து வந்துள்ளார்.

மனுதார், எதிர்மனுதாரருடன் ஒன்றாக வசிந்து வந்த நாட்களில் எதிர்மனுதார் மனுதாரின் குடும்பத்தினரை தரக்குறைவான வார்த்தைகள் பேசியும் மனரீதியாக கொடுமைப்படுத்தியும், மனுதார்க்கு உணவுக்கோ, உடைக்கோ பணம் தராமல் மனுதாரரும், குழந்தைகளும் பல நாள்கள் உணவின்றி பட்டினியோடு இருந்து வந்துள்ளார்கள். மேலும் எதிர்மனுதார், வீட்டிற்கு வராமல் பல நாட்களாக இருந்து வந்துள்ளார். எதிர்மனுதார் தவறான நபர்களுடன் சேர்ந்து மது அருந்திவிட்டு வீட்டிற்கு வந்து, மனுதாரரை அடித்து, கொடுமைப்படுத்தி சித்ரவதை செய்து வந்ததால் மனுதார், எதிர்மனுதாரரை கண்டிக்கவே, எதிர்மனுதார், மனுதாரரை அடித்து கடந்த 04.12.2021-ம் தேதி நள்ளிரவில் வீட்டை விட்டு வெளியே தள்ளி கதவை பூட்டி, அருகில் இருந்தவர்கள் விலக்கி விட்டதின் பேரில் மனுதார் உயிர் பிழைத்து, மனுதார் அக்கம் பக்கம் இருந்தவர்களின் உதவியுடன் பண்ணைக்காட்டில் உள்ள வீட்டிலிருந்து, மனுதாரின் பெற்றோர் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். எதிர்மனுதாரின் செயலால் மனுதாரர், எதிர்மனுதாரரை விட்டு பிரிந்து கடந்த 04.12.2021-ம் தேதி, முதல் தனித்து கஷ்ட ஜீவனம் செய்து வசித்து வருகிறார். மனுதார் எதிர்மனுதாரரை

பலமுறை நேரிலும், ஆட்கள் மூலமும் அணுகி சேர்ந்து வாழும்படி கூறியும் எதிர்மனுதாரர், மனுதாருடன் சேர்ந்து வாழ முன் வரவில்லை. மனுதாரர் ஊர் பெரியவர்களிடம் மேற்படி விஷயங்களை சொல்லி முறையிட்டதன் பேரில் அவர்கள் எதிர்மனுதாரரை அழைத்து சமரசம் பேசி, மனுதாரரை அழைத்துச் சென்று குடும்பம் நடத்தும்படி புத்திமதி கூறியுள்ளார்கள். ஆனால் எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றும் வேறு பெண்ணை திருமணம் செய்ய போவதாகவும் கூறி யாருடைய பேச்சுக்கும் கட்டுப்படாமல் சென்று விட்டார். மனுதாரர் எதிர்மனுதாரருடன் இனிமேலும் சேர்ந்து வாழ எவ்விதமான சாத்தியக்கூறும் இல்லை. மேலும் மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்ந்தால் உயிருக்கு ஆபத்தான சூழ்நிலை உள்ளது. எதிர்மனுதாரரின் மைனர் குழந்தையின் நலனில் அக்கறை இல்லாமல் சரியான உணவு, உடை கொடுக்காமலும் கொடுமைப்படுத்தி வருகிறார். எனவே, மனுதாரர் மைனர் குழந்தை மோனஸ் துரையை தன்னிடம் வளர்க்க விரும்புவதாக எதிர்மனுதாரரிடம் தெரிவித்தபோது, எதிர்மனுதாரர் மைனர் குழந்தையை கொடுக்க மறுத்து வருகிறார். எனே மனுதாரர் குழந்தையை தனது பராமரிப்பில் வளர்க்க அனுமதி கோரி தனியாக மனு தாக்கல் செய்யும் உரிமையை ரிசர்வ் செய்து கொள்கிறார். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே எந்தவிதமான கூட்டு உடன்படிக்கையும் கிடையாது. இனி மேலும் எதிர்மனுதாரருடன் மனுதாரர் சேர்ந்து வாழ்வது அர்த்தமற்றதாகும். எனவே விவாகரத்து பரிகாரம் வழங்கி தீர்ப்பாக வேண்டும்.

7) இம்மனுவில் எதிர்மனுதாரருக்கு நீதிமன்ற அழைப்பாணை அனுப்பப்பட்டு அதனை பெற்றுக் கொண்ட பின்னரும் 27.11.2025 ம் தேதி மனு விசாரணை அழைப்பின் போது எதிர்மனுதாரர் அழைக்கப்பட்டு ஆஜரின்றி தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

8) **<u>தீர்விற்குரிய பிரச்னை:</u>**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 3.7.2011 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்துச் செய்து விவாகரத்து பரிகாரம் வழங்கத்தக்கதா?

9) இம்மனு விசாரணையில் மனுதாரர் தன்னை ம.சா.1 ஆக விசாரித்துக்கொண்டு, 4 ஆவணங்களை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்து கொண்டுள்ளார். மனுதாரரின் தகப்பனரான செல்வம் ம.சா.2 ஆகவும், மனுதாரரின் தகப்பனாரின் சகோதரர் ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளனர்.

10) **<u>தீர்வு:</u>**

மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் கடந்த 3.7.2011 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்கக் கேட்டு இம்மனு முன்னிடப்பட்டுள்ளது. மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்ட போது மனு சங்கதிகளை முழுவதுமாக எடுத்துரைத்து சாட்சியமளித்துள்ளார். 3.7.2011 ம் தேதி மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமண பதிவு ஏற்பட்ட சான்றிதழ் புகைப்பட நகல் ம.சா.ஆ.1 ஆகவும், 3.7.2011 ம் தேதி நடைபெற்ற

திருமணத்திற்கான அழைப்பிதழ் அச்சுப்பிரதி ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.3 ஆகவும், 26.7.2025 ம் தேதி மனுதாரின் மூத்த மகன் இறந்ததற்கான இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டு அவைகள் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி ஆவணங்களின் வாயிலாக மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 3.7.2011 ம் தேதி திருமண பதிவு நடை பெற்றுள்ளது என்பதும் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின் பயனாக 6.7.2010 ம் தேதி ஒரு ஆண் குழந்தையும் பின்னிட்டு 27.7.2017 ம் தேதி ஒரு ஆண் குழந்தை பிறந்திருப்பது மனுதாரரின் நிரூபண வாக்குமூலம் மூலமாகவும் அதன்பின்னர் மேற்படி முதல் ஆண்குழந்தை கடந்த 26.7.2025 ம் தேதி சாலை விபத்தில் இறந்திருப்பதை ம.சா.ஆ.4 ன் மூலம் அறிய முடிகின்றது.

11) இந்நிலையில் மனுதாரர் தரப்பு மனு மற்றும் சாட்சிய சங்கதிகள், ஆவணங்களை மறுத்துக்கூறும் வகையில் இம்மனுவில் எதிர்மனுதாரர் முன்னிலையாகாமல் மனு விசாரணை அழைப்பின் போது ஆஜரின்றி தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார். எனவே மனுதாரர் தரப்பு சாட்சிய சங்கதிகள் மற்றும் ஆவணச்சான்றுகள் ஆகியவை மனுதாரருக்கு ஆதரவாக மெய்ப்பிக்கப்பட்டுள்ளதாகவே கருத முடிகின்றது. மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடைபெற்று பின்னர் இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்து பின்னிட்டு சாலைவிபத்தில் முதல் ஆண் குழந்தை இறந்து நிலையில் எதிர்மனுதாரர் மது அருந்திவிட்டும், பல பெண்களுடன் கள்ள

தொடர்வு வைத்தும் எதிர்மனுதாரரை சித்தரவரை செய்துள்ள நிலையில் மனுதாரர் இது குறித்து கேள்வி கேட்டால் " நான் அப்படிதான் செய்வேன், நீயும் யாருடன் வேண்டுமானலும் செல் " என்று தரக்குறைவாக பேசியும், மனுதாரரிடம், மனுதாரரின் பெற்றோர் வீட்டில் ரூ.1,00,000/–மும் வரதட்சணையாக 10 பவுன் நகை வாங்கி வரும்படியும் கொடுமைப்படுத்தியதாகவும், பின்னர் 4.12.2021 ம் தேதி எதிர்மனுதாரர் மது அருந்திவிட்டு, மனுதாரரை அடித்து சித்ரவரை படுத்தி வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டதாகவும், பின்னர் பெரியோர்கள் சமாதனம் பேச அழைத்தபோது மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றும் வேறு பெண்ணை திருமணம் செய்ய போவதாகவும் கூறிவிட்டதாகவும், எனவே இனிமேலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ இயலாது என்பதால் விவாகரத்து பரிகாரம் கோருவதாகவும் கூறும் மனுதாரரின் கூற்று உண்மைத்தன்மை வாய்ந்ததாகவே இந்நீதிமன்றம் கருதுகின்றது. பலமுறை குடும்ப பெரியோர்கள் முயற்சித்தும் மனுதாரரும் எதிர்மனுதாரரும் சேர்ந்து வாழ்வதற்கான சாத்தியக்கூறு இல்லை என்பதும் புலனாகின்றது. எனவே மனுதாரரின் எதிர்கால வாழ்வை கருத்தில் கொண்டு மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 3.7.2011 ம் தேதி நடைபெற்ற திருமணத்தை ரத்துச் செய்து உத்தரவிடுவது தான் மனுதாரரின் நலனுக்கும் நீதியின் நலனுக்கும் உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்ற இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்கிறது.

**முடிவாக,** இம்மனு அனுமதிக்கப்பட்டு, மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 3.7.2011 ம் தேதி, கொடைக்கானல் வட்டம், பண்ணைக்காடு கிராமம், காந்திஜிபுரத்தில் வைத்து நடைபெற்ற திருமணம் ரத்துச் செய்யப்பட்டு, விவாகரத்து வழங்கி உத்தரவிடப்படுகிறது. வழக்கின் தன்மையை கருத்தில்கொண்டு செலவுத்தொகை வழங்கப்படவில்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்குச் சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்து, 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ம் நாள் என்னால் அவையறிய இத்திறந்த நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.04.30 18:59:48 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

இணைப்பு:

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :</u>**

ம.சா.1 – ஆரோக்கிய டெய்சி(மனுதாரர்)
ம.சா.2 – செல்வம்
ம.சா.3 – ஜெயராஜ்

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 7.10.2011 | மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் திருமண பதிவு சான்று – உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 3.7.2011 | மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமணத்திற்கான அழைப்பிதழ் அச்சுப்பிரதி |
| ம.சா.ஆ.3 | --- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.4 | --- | மனுதாரரின் முதல் ஆண் குழந்தை இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் கணிணி நகல் |

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.04.30 18:59:54 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**

**திண்டுக்கல்.**